DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.55/2020
*****

Deposition of Witness for Prosecution witness No: PW2

பட்டியல் சாட்சி LW2

| | | |
|---|---|---|
| Name | : | **பாலசுப்பிரமணியன்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 31.10.2023 |

**( A1, A2 are present with counsel )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் கிழநீலிதநல்லூர் கிராமத்தில் குடியிருந்து செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முத்துபாண்டி தெரியும். கடந்த 04.04.2019 அன்று இரவு 9 மணிக்கு நானும் பெருமாள் என்பவரும், கிழநீலிதநல்லூரில் இருந்து சிதம்பராபுரம் வழியாக மலையாங்குளம் கல்மண்டபம் அருகே வரும்பொழுது, முத்துபாண்டி என்பவர் மருந்தை குடித்துள்ளதாக கூறி ஆஜர் எதிரிகள் அந்தோணி ராஜ், மற்றொருவரும் குடும்ப பிரச்சனையில் மருந்தை முத்துபாண்டி குடித்தாக கூறி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள். அதன்பின்பு நான் மருத்துவமனை சென்று முத்துபாண்டியனை பார்த்த போது, குடும்ப பிரச்சனையில் நான் மருந்து குடிக்கவில்லை.

முத்துபாண்டியின் மனைவிக்கும் அந்தோணி ராஜ்க்கும் தொடர்பு இருந்ததாகவும், அதனால் என்னை கொல்லவேண்டும் என்ற நோக்கில் அந்தோணி ராஜ் மருந்தை முத்துபாண்டி யின் வாயில் ஊற்றியதாகவும், முத்துபாண்டி அதை தடுத்தாகவும், மருந்து மேல்எல்லாம் கண்ணில்பட்டு கத்தி கதறியதாக கூறினார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**கு.வி இல்லை.**